# TNPSC GROUP – II தேர்வு

## ஒரிஜினல் வினாத்தாள் - 2000 (மறுதேர்வு)

## பொது அறிவும் பொதுத் தமிழும்

**1. அடர்த்தி என்பது கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.**

A) நிறை / பருமன்

B) நிறை × பருமன்

C) பருமன் / நிறை

D) இவற்றுள் எதுவுமில்லை.

**2. திரவத்தினுள் ஓரளவுக்கு மூழ்கியிருக்கும் ஒரு பொருளின மீது செயற்படும் முடிவான மேல்நோக்கு அழுத்தம்**

A) அந்த பொருளின் புவி ஈர்ப்பு மையத்தின் வழியாகச் செயல்படுகிறது

B) வடிவ மையத்தின் வழியாகச் செயல்படுகிறது

C) அழுத்தத்தின் மையத்தின் வழியாக செயல்படுகிறது

D) இவற்றுள் எதுவுமில்லை

**3. குறுக்கலை z–அச்சு வழியாக செல்லும்போது ஊடகத்தில் உள்ள துகள்கள் கீழ்க்கண்டவாறு அசையும்.**

A) z–அச்சு B) x–அச்சு

C) y–அச்சு D) x-y தளத்தில்

**4. ஜூல்–தாம்சன் குளுமையானது**

A) வெப்பநிலையைப் பொறுத்தது.

B) வெப்பநிலையைப் பொறுத்தது அல்ல.

C) வாயுவின் மூலக்கூறு எடையைப் பொறுத்தது.

D) வாயுவின் மொத்த நிறையைப் பொறுத்தது.

**5. புள்ளி செயல்பாடு தத்துவம் எங்கு உபயோகப் படுகிறது?**

A) மின்தேக்கிகள்

B) மின்தூண்டுச் சுருள்கள்

C) மின்தடைகள்

D) இடிதாங்கிகள்

**6. ஒரு ஜெட் விமான இயந்திரம் வேலை செய்யும் அடிப்படைத் தத்துவம்**

A) நிறை B) ஆற்றல்

C) நேர்கோட்டு உந்தம் D) கோண உந்தம்

**7. சூரியனின் வெப்பநிலை காண உதவும் விதி**

A) சார்லஸ் விதி

B) ஸ்டீஃபனின் நான்மடி விதி

C) பாயில் விதி

D) கிர்சாப் விதி

**8. தசைகளில் இரத்த ஓட்டம் நடைபெறுவது**

A) இரத்தத்தின் மெல்லிய அடர்த்தியால்

B) இரத்தத்தின் பாகுநிலையால்

C) நுண்புழையேற்றத்தால்

D) உறிஞ்சுவதால்

**9. கதிரியக்கக் கார்பன் வயதுக் கணிப்பு பயன்படுவது**

A) நோய்களைக் கண்டறிய

B) சரித்திரச் சான்றுகளின் வயதைக் காண

C) வளி மண்டலத்தில் கார்பனின் அளவைக் காண

D) இவற்றுள் எதுவுமில்லை

**10. வீச்சு பண்பேற்றத்தை விட அதிர்வெண் பண்பேற்றம் சிறந்தது. ஏனெனில்**

A) உருக்குலைவு இருக்காது.

B) உருக்குலைவு மிக அதிகம்.

C) உட்புற ஒலி உண்டாக்கப்படுவதில்லை.

D) உட்புற ஒலியை வடிகட்டி விடலாம்.

**11. X–கதிர்கள் செல்லும் திசைவேகம் எதற்குச் சமம்?**

A) ஒளி B) ஒலி

C) நேர்மின் கதிர்கள் D) ஆல்ஃபா கதிர்கள்

**12. ஒலிப்பெருக்கி**

A) மின்சக்தியை ஒலி சக்தியாக மாற்றுகிறது

B) ஒலி சக்தியை மின் சக்தியாக மாற்றுகிறது

C) சிறிய ஒலியைப் பெரிதாக மாற்றும்

D) இவற்றுள் எதுவுமில்லை

**13. ஒளியின் குறுக்கலைப் பண்பு எதனால் நிரூபிக்கப்படுகிறது?**

A) குறுக்கீட்டு விளைவு

B) விளிம்பு விளைவு

C) தளவிளைவு

D) ஒளி விலகல்

**14. மின்சார இஸ்திரிப்பெட்டி குளிர அதிக நேரம் எடுக்கக் காரணம்**

A) கதிர் வீச்சுத் திறன் அதிகம்

B) கதிர் வீச்சுத் திறன் குறைவு

C) உட்கவர் திறன் குறைவு

D) உட்கவர் திறன் அதிகம்

**15. ஹீலியம் வாயு ஹைட்ரஜன் வாயுவுக்கு பதிலாக நிரப்பப்படுவதற்கு காரணம்**

A) உந்துவிசை அதிகம்

B) குறைந்த அடர்த்தி உள்ளது

C) சிக்கனமானது

D) காற்றுடன் கலந்த கலவை வெடிக்கும் ஆபத்து தராதது

**16. அதிக அளவில் ஆல்கஹால் உட்கொள்வதால் பாதிக்கப்படும் உறுப்பு**

A) கல்லீரல் B) சிறுநீரகம்

C) இருதயம் D) நுரையீரல்

**17. கீழ்க்கண்டவற்றுள் பூண்டு மணமுடையது**

A) வெண் பாஸ்பரஸ்

B) சிவப்பு பாஸ்பரஸ்

C) பாஸ்பரஸ் குளோரைடு

D) பாஸ்பீன்

**18. நைட்ரஜன் அடங்கிய ஒரு பொதுவான உரம்**

A) யூரியா

B) சூப்பர் பாஸ்பேட்

C) டிரிபிள் பாஸ்பேட்

D) பொட்டாசியம் குளோரைடு

**19. கீழ்க்கண்டவற்றுள் எது ஓர் உலோகப் போலி?**

A) தாமிரம் B) ஆர்சனிக்

C) அலுமினியம் D) தங்கம்

**20. 'மாலைக்கண் நோய்' ஏற்பட எந்த வைட்டமின் சத்து குறைவு காரணம்?**

A) வைட்டமின் A B) வைட்டமின் B

C) வைட்டமின் K D) வைட்டமின் E

**21. பாதரசம் வெப்பமானிகளில் பயன்படுத்தப் படுவதற்கான காரணம்**

A) கனமானது B) திரவம்

C) சீராக விரிவடையும் D) உலோகம்

**22. சோடியம் குளோரைடு என்பது கீழ்க் கண்டவற்றில் எதனுடைய வேதிப் பெயர்?**

A) சாதாரண உப்பு B) மிருக கரி

C) துரு D) சுண்ணாம்புக் கல்

**23. பசுமையான உணவு மற்றும் பழங்களில் உள்ள சத்து எது?**

A) புரதச் சத்து

B) கொழுப்புச் சத்து

C) வைட்டமின்கள்

D) மாவுச் சத்து

**24. மின்சார பல்புகளில் நிரப்பப்பட்டுள்ள வாயு**

A) ஆக்ஸிஜன்

B) கார்பன்டை – ஆக்ஸைடு

C) ஆர்கான்

D) நைட்ரஜன்

**25. தீப்பெட்டியின் பக்கங்களில் உள்ள பொருள்**

A) சிவப்பு பாஸ்பரஸ்

B) வெண் பாஸ்பரஸ்

C) பாஸ்பரஸ் பென்டாக்ஸைடு

D) இவற்றுள் எதுவுமில்லை

**26. பெனிசிலின் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?**

A) எட்வர்டு ஜென்னர்

B) ஜே.சி. போஸ்

C) அலெக்சாண்டர் ஃப்ளெமிங்

D) வில்லியம் ஹார்வி

**27. கண்ணாடியைக் கரைக்கும் அமிலம்**

A) நைட்ரிக் அமிலம்

B) கந்தக அமிலம்

C) ஹைட்ரோகுளோரிக் அமிலம்

D) ஹைபோகுளோரஸ் அமிலம்

**28. பண்டைய இந்திய ரசவாதிகள் தங்கம் தயாரிக்கவும், சாகாத மருந்து தயாரிக்கவும் உபயோகித்தவை**

A) இரும்பும் வெள்ளியும்

B) துத்தநாகமும் கந்தகமும்

C) தங்கமும் பாதரசமும்

D) பாதசரமும் கந்தகமும்

**29. ஈஸ்ட், கீழ்க்கண்டவற்றுள் எதனை உண்டாக்க பயன்படுகிறது?**

A) ஆக்ஸிஜன் B) குளுக்கோஸ்

C) ஆல்கஹால் D) உப்பு

**30. பெரும்பாலான பருப்பு வகை தாவரங்கள் உள்ள குடும்பம்**

A) யூபோர்பியேஸி B) பேபேஸி
C) ஆஸ்டிரேஸி D) மியுஸேஸி

**31. கீழ்க்கண்ட புரோட்டோசோவான்களில் எதற்கு தெளிவான வடிவம் உள்ளது?**

A) அமீபா
B) பாரமீஸியம்
C) இவை இரண்டும்
D) இவற்றுள் எதுவுமில்லை

**32. பாக்டீரியாக்களின் வளர் ஊடகத்தில் பயன்படுத்தப்படுவது எது?**

A) அயோடின் B) அகார்–அகார்
C) சர்க்கரை D) ஆல்கஹால்

**33. மலேரியா நோயை உண்டாக்குபவை**

A) வைரஸ்கள் B) பாக்டீரியா
C) புரோட்டோசோவா D) பூஞ்சைகள்

**34. எளிய வகை நிலவாழ் தாவர வகையானது**

A) பிரையோபைட்டுகள்
B) லைகன்கள்
C) ஆல்காக்கள்
D) பூஞ்சைகள்

**35. பாக்டீரியா பொதுவாக பகுப்படையும் வகை**

A) இரட்டை பகுப்பு
B) பல பகுப்பு
C) நீள் பகுப்பு
D) இவை அனைத்தும்

**36. அகார்–அகார் எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?**

A) ஜெலிடியம் B) லாமினேரியா
C) எக்டோகார்பஸ் D) பியூக்கஸ்

**37. நனைந்த ரொட்டியில் வளரும் உயிர்**

A) ஈஸ்ட்
B) பூஞ்சை
C) இவை இரண்டும்
D) இவற்றுள் எதுவுமில்லை

**38. நைட்ரஜன் நிலைநிறுத்துதல் செய்பவை**

A) நீலப் பசும் பாசிகள்
B) பசும் பாசிகள்
C) பழுப்பு நிற ஆல்கா
D) சிகப்பு ஆல்கா

**39. கீழ்க்கண்டவற்றுள் எது பூச்சி இனங்களின் குடலில் இருந்து செல்லுலோஸை செரிக்க உதவுகிறது?**

A) ஈஸ்ட்
B) பாக்டீரியா
C) புரோட்டோசோவான்கள்
D) ஆல்காக்கள்

**40. சர்க்கரை கரைசலிலிருந்து ஒயின் (வினிகர்) உண்டாக்கும் பாக்டீரியா**

A) எஸ்செரிசியா
B) அஸிடோபேக்டர்
C) அஸிட்டோபேக்டர் அஸிடி
D) ரைஸோபியம்

**41. பேக்கரி–ஈஸ்ட் எனப்படுவது**

A) சைகோஸெக்காரோமைஸிஸ் ஆக்டோஸ்போரஸ்
B) ஸெக்கரோமைசிஸ் ஸெரிவிஸியே
C) லெமினேரியா
D) ஸெ.லெடுவெஜி

**42. மிக உயரமான மர வகைகள் காணப்படும் தாவர பிரிவு**

A) டெரிடோபைட்டுகள்
B) மானோகாட்டுகள்
C) ஜிம்னோஸ்பெர்ம்கள்
D) டைகாட்டுகள்

**43. டில்லியில் சுற்றுப்புற அசுத்தங்களை உருவாக்குவது**

A) ஆட்டோமொபைல்
B) சிமெண்ட் தொழிற்சாலை
C) உரத் தொழிற்சாலை
D) அனல் மின்நிலையம்

**44. நீரின் pH மதிப்பு**

A) 4 B) 7
C) 12 D) 0

**45. அயோடின் குறைபாடு ஏற்படுத்துவது**

A) நீரிழிவு
B) ஸ்கர்வி
C) ரிக்கட்ஸ்
D) முன்கழுத்துக் கழலை

**46. புகையிலையில் உள்ள நச்சுத் தன்மையுள்ள பொருள்**

A) மார்பீன் B) ஆஸ்பிரின்
C) நிகோட்டின் D) ரெசர்பின்

**47. சிறுநீரில் வெளியேற்றப்படும் பொருள்**

A) சர்க்கரைப் பொருள்
B) கிரியேடின்
C) புரதப் பொருள்
D) கொழுப்புப் பொருள்

**48. நாடாப்புழு யாரிடம் அதிகமாகக் காணப்படும்?**

A) மீன் உண்பவர்களிடம்
B) பன்றி மாமிசம் உண்பவர்களிடம்
C) மாமிசம் உண்பவர்களிடம்
D) மாட்டுக் கறி உண்பவர்களிடம்

**49. எய்ட்ஸ் வைரஸ் முதன்முதலில் கண்டுபிடிக்கப் பட்ட மிருகம்**

A) எலி B) முயல்
C) குதிரை D) குரங்கு

**50. ஹர்கோவிந்த் குரானா என்பவர் கீழ்க் கண்டவற்றுள் எந்த கண்டுபிடிப்பிற்காக கௌரவிக்கப்பட்டார்?**

A) புரத உற்பத்தி
B) ஜீன் மருத்துவம்
C) நைட்ரஜன் பேஸ் உற்பத்தி
D) இவற்றுள் எதுவுமில்லை

**51. கீழ்க்கண்டவற்றுள் எந்த வகை பால்வினை குரோமோசோம்கள் ஓர் ஆணைக் குறிப்பிடும்?**

A) YY B) XX
C) XY D) XO

**52. கீழ்க்கண்டவற்றுள் எந்த வியாதி வராமல் தடுக்க டிரிபிள் ஆன்டிஜன் கொடுக்கப்படுகிறது?**

A) டிப்தீரியா, டெட்டனஸ் மற்றும் காச நோய்
B) டெட்டனஸ், காசநோய் மற்றும் மலேரியா காய்ச்சல்
C) டிப்தீரியா, டெட்டனஸ் மற்றும் கக்குவான் இருமல்
D) டிப்தீரியா, டெட்டனஸ் மற்றும் மலேரியா காய்ச்சல்

**53. பட்டியல் Iஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன் படுத்தி, உங்களது விடையைத் தேர்ந்தெடுக்க.**

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| a) மைட்டோகாண்ட்ரியா | 1) ஒளிச்சேர்க்கை |
| b) குளோரோபிளாஸ்ட் | 2) நீராவிப் போக்கு |
| c) ஸ்டோமேடா | 3) சுவாசித்தல் |
| d) செல் சுவர் | 4) ஆஸ்மாஸிஸ் |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 3 | 1 | 2 | 4 |

**54. நியூகிளியோடைட் எதனால் உருவாக்கப் பட்டுள்ளது?**

1) பாஸ்பாரிக் அமிலம்
2) டிஆக்ஸிரைபோஸ் சர்க்கரை
3) நைட்ராஜினஸ் காரங்கள்

**கீழ்க்கண்டவற்றுள் சரியான விடை எது?**

A) 1, 2 மற்றும் 3 B) 1 மற்றும் 2
C) 2 மற்றும் 3 D) 3 மட்டும்

**55. பாக்டீரியோபேஜ் என்பது**

A) இறந்த திசுக்களில் வசிக்கும் ஒரு பாக்டீரியா
B) பாக்டீரியாவைத் தாக்கி அழிக்கும் ஒரு வைரஸ்
C) வைரஸுடன் சண்டையிடும் ஒரு பாக்டீரியா
D) ஒரு நீலப் பச்சை பாசி

**56. ஒரு செல்லில் ரைபோசோமின் முக்கிய பங்கு யாது?**

A) கொழுப்பு உற்பத்தி B) ஒளிச்சேர்க்கை
C) புரத உற்பத்தி D) சுரத்தல்

**57. கௌதம புத்தர் முதன்முதலில் போதித்த இடம்**

A) சாரநாத் B) லும்பினி
C) கயா D) கபிலவஸ்து

**58. அர்த்தசாஸ்திரத்தை எழுதியவர் யார்?**

A) கௌடில்யர் B) காந்திஜி
C) நேருஜி D) பாணர்

**59. இந்தியாவின் மீது படையெடுத்த முதல் முஸ்லீம் யார்?**

A) கஜினி முகமது B) கோரி முகமது
C) ஐபெக் D) முகமது பின் காசிம்

**60. ஜெஸியா வரி மீண்டும் யார் காலத்தில் விதிக்கப்பட்டது?**

A) அக்பர் B) ஔரங்கசீப்
C) ஜஹாங்கீர் D) ஹுமாயூன்

**61. பிளாசிப் போர் எந்த ஆண்டு நடைபெற்றது?**
A) 1757 B) 1775
C) 1576 D) 1761

**62. பக்ஸார் சண்டை எப்பொழுது நடைபெற்றது?**
A) 1761 B) 1762
C) 1763 D) 1764

**63. நிலையான நிலவரித் திட்டம் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?**
A) 1793 B) 1792
C) 1791 D) 1790

**64. எப்பொழுது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்தது?**
A) 1857 B) 1858
C) 1859 D) 1860

**65. முதல் இந்திய பெண் போலீஸ் அதிகாரி யார்?**
A) கிரண் பேடி B) சந்திரிகா
C) சசிகலா D) ஜெயா

**66. பொன்னியின் செல்வன் என்ற நாவலை எழுதியவர் யார்?**
A) கல்கி B) கண்ணதாசன்
C) பாரதியார் D) பாரதிதாசன்

**67. எப்பொழுது, எங்கே இராஜராஜன், இராஜேந்திரன் மற்றும் இராஜாதிராஜன் ஆகியோரின் தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன?**
A) 1946, தொள்ளேஸ்வரம்
B) 1947, தஞ்சாவூர்
C) 1948, கங்கை கொண்ட சோழபுரம்
D) 1949, திருச்சி

**68. மாமன்னன் அலெக்ஸாண்டருடன் போர் செய்த இந்திய மன்னன் யார்?**
A) போரஸ்
B) அசோகர்
C) ஹர்ஷர்
D) இரண்டாம் சந்திரகுப்தர்

**69. தென்னிந்தியாவில் ஓடும் பெரிய நதி எது?**
A) காவேரி B) வைகை
C) கோதாவரி D) முல்லை

**70. 'இந்தியாவின் நைட்டிங்கேல்' என்று பெயர் பெற்றவர் யார்?**
A) சரோஜினி நாயுடு B) சுப்புலட்சுமி ரெட்டி
C) அன்னிபெசன்ட் D) ஜான்சி ராணி

**71. உலகிலேயே பெரிய காப்பியம் எது?**
A) மகாபாரதம் B) சிலப்பதிகாரம்
C) மணிமேகலை D) நற்றிணை

**72. பஞ்சசீல கொள்கையை உருவாக்கிய நகரம் எது?**
A) டெல்லி B) பாண்டுங்
C) லண்டன் D) வாஷிங்டன்

**73. இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியின் தந்தை யார்?**
A) மேஜர் ஜெனரல் அலெக்சாண்டர்
B) ஜான் மார்ஷல்
C) வின்சென்ட் ஸ்மித்
D) ஹெர்பர்ட்

**74. யாருடைய ஆலோசனையின்படி இரண்டாம் சரபோஜி சரஸ்வதி மஹால் நிலையத்தை கட்டினார்?**
A) சுவார்ட்ஸ் B) சீகன் பால்
C) கால்டுவெல் D) புளூட்சோ

**75. கீழ்க்கண்ட நகரங்களுள் எது ஷூ தயாரிப்புக்கு பிரசித்தி பெற்றது?**
A) பாஸ்டி B) மைசூர்
C) இந்தூர் D) பாட்டா நகர்

**76. கீழ்க்கண்ட மாநிலங்களுள் எது வங்க தேசத்துடன் பொதுவான எல்லையைப் பெற்றிருக்கவில்லை?**
A) மேகாலயா B) திரிபுரா
C) நாகலாந்து D) மிசோரம்

**77. கீழ்க்கண்ட நகரங்களுள் எது பூட்டு உற்பத்திக்கு பிரசித்தி பெற்றுள்ளது?**
A) ஹைதராபாத் B) அலிகார்
C) நெல்லூர் D) நாக்பூர்

**78. இந்திய கடற்படைத் தளம் அமைந்துள்ள இடம்**
A) மும்பை
B) விசாகப்பட்டினம்
C) கார்வார்
D) தூத்துக்குடி

**79. 1991 மக்கள்தொகை கணக்கீட்டின் படி, எந்த மாநிலத்தில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைவிட அதிகமாக உள்ளது?**

A) ஆந்திர பிரதேசம் B) பீஹார்
C) கேரளா D) தமிழ்நாடு

**80. தெலுங்கு கங்கை திட்டம் எந்த நதியுடன் தொடர்புடையது?**

A) கோதாவரி B) கிருஷ்ணா
C) காவேரி D) மஹாநதி

**81. கீழ்க்கண்டவற்றுள் காடுகளை அழிப்பதால் எவை நடைபெறுகின்றன?**

A) நிலத்தடி நீர் குறைதல்
B) மண் அரிப்பு
C) வெள்ளம்
D) இவை அனைத்தும்

**82. நர்மதை நதிக் கொப்பரை பகுதி கீழ்க்கண்ட எந்த மாநிலங்களில் உள்ளது?**

A) மஹாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசம்
B) மஹாராஷ்டிரா மற்றும் இராஜஸ்தான்
C) மஹாராஷ்டிரா மற்றும் பீஹார்
D) மஹாராஷ்டிரா மற்றும் உத்திரப் பிரதேசம்

**83. கீழ்க்கண்டவற்றுள் எது கோடைக்காலப் பயிராகும்?**

A) கோதுமை B) நெல்
C) பருப்பு D) கடுகு

**84. பட்டியல் Iஐ, பட்டியல் II டன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.**

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| a) டிட்டாகர் | 1) உரம் |
| b) நேப்பா நகர் | 2) காகிதம் |
| c) சிந்திரி | 3) சிமெண்ட் |
| d) கட்னி | 4) பத்திரிக்கை காகிதம். |

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 2 | 4 | 1 | 3 |

**85. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்த வில்லை?**

A) ரூர்கேலா எஃகு ஆலை – ஒரிஸ்ஸா
B) பிலாய் எஃகு ஆலை – மஹாராஷ்டிரா
C) துர்காபூர் எஃகு ஆலை – மேற்கு வங்காளம்
D) பொகாரோ எஃகு ஆலை – பீஹார்

**86. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்த வில்லை?**

A) டார்ஜிலிங் – மேற்கு வங்காளம்
B) அபு மலைத் தொடர் – இராஜஸ்தான்
C) கொடைக்கானல் – தமிழ்நாடு
D) சிம்லா – உத்தரப் பிரதேசம்

**87. வடகிழக்கு பருவக் காற்றினால் அதிகபட்ச மழைப்பொழிவு பெறும் மாநிலம் எது?**

A) கர்நாடகா
B) தமிழ்நாடு
C) குஜராத்
D) மஹாராஷ்டிரா

**88. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத இணையைக் கண்டுபிடி.**

A) போஸ் ஆராய்ச்சி நிறுவனம் – கொல்கத்தா
B) ராமன் ஆராய்ச்சி நிறுவனம் – சென்னை
C) தேசிய அருங்காட்சியகம் – புது டெல்லி
D) இந்திய சர்வே நிறுவனம் – டேராடூன்

**89. இந்தியாவில் எந்த ஏரி அதிக உப்பளவைப் பெற்றிருக்கிறது?**

A) தால் B) சில்கா
C) ஊலார் D) சாம்பார்

**90. பட்டியல் Iஐ, பட்டியல் II டன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு.**

| பட்டியல் – I | பட்டியல் – II |
|---|---|
| a) ஸ்ரீநகர் | 1) கிருஷ்ணா |
| b) ஆக்ரா | 2) கங்கை |
| c) வாரணாசி | 3) யமுனா |
| d) விஜயவாடா | 4) ஜீலம் |



www.mntfreeias.com

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 4 | 3 | 2 |

**91. கிழக்கத்திய விவசாயம் நடைபெறுவது**

A) பிரிட்டன் B) கனடா
C) அரேபியா D) இந்தியா

**92. கடக ரேகை, எந்த மாநிலத்தின் வழியே செல்கிறது?**

A) பீஹார்
B) உத்தரப் பிரதேசம்
C) ஹிமாசல பிரதேசம்
D) ஆந்திர பிரதேசம்

**93. இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு**

A) 1935 B) 1948
C) 1956 D) 1960

**94. முதல் ஐந்தாண்டுத் திட்டம் எந்த ஆண்டு துவங்கப்பட்டது?**

A) 1948 B) 1951
C) 1956 D) 1960

**95. ஜவஹர் ரோஜ்கார் யோஜனா என்ற திட்டத்தின் நோக்கம்**

A) கிராம பொருளாதாரத்தை அபிவிருத்திச் செய்தல்
B) நகர்புறத்தில் குடியேறியவர்களுக்கு வீடு கட்டும் பயிற்சி அளித்தல்
C) சிறு தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல்
D) கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்

**96. ஒரு ஹெக்டேருக்கு தானிய உற்பத்தியில் மிக அதிக அளவு விளைவைத் தரும் மாநிலம்**

A) ஆந்திர பிரதேசம்
B) ஹரியானா
C) தமிழ்நாடு
D) பஞ்சாப்

**97. இந்திய மாநிலங்களில் 1991 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை செறிவு மிகுதியான மாநிலம்**

A) கேரளா B) தமிழ்நாடு
C) பீஹார் D) மேற்கு வங்காளம்

**98. இந்தியாவில் மிக அதிக நிலப்பரப்பில் பயிரிடப்படும் பயிர் எது?**

A) நெல் B) கரும்பு
C) சணல் D) கோதுமை

**99. புதிய காசுகளை மையமாகக் கொண்ட நாணயத் திட்டம் பின்வரும் ஆண்டில் இந்தியாவில் அமுலுக்கு வந்தது.**

A) 1935 B) 1947
C) 1955 D) 1960

**100. தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தின்படி நில உச்சவரம்பு**

A) 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர்
B) 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர்
C) 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்
D) 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர்

**101. இந்திய தேசிய வருமானத்தில் விவசாயத்தின் பங்கு தோராயமாக**

A) 50% B) 38%
C) 75% D) 25%

**102. 'சுவாகத் திட்டத்தை' சமீபத்தில் அறிமுகப் படுத்திய வங்கி**

A) பஞ்சாப் நேஷனல் வங்கி
B) குஜராத் பேங்க் லிட்
C) பஞ்சாப் வங்கி
D) கனரா வங்கி

**103. உலகில் மீன் அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு**

A) சீனா B) ரஷ்யா
C) ஜப்பான் D) நார்வே

**104. தனி நபர் கணக்கு துவங்கப்பட முடியாத வங்கி**

A) கூட்டுறவு வங்கி
B) வரையறுக்கப்பட்ட வங்கி
C) இந்திய ரிசர்வ் வங்கி
D) இவற்றுள் எதுவுமில்லை

**105. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம்**

A) 1947-52 B) 1950-55
C) 1951-56 D) 1952-57

**106. இந்தியாவில் ஒரு ரூபாய் நாணயங்கள் வெளியிடும் அதிகாரம் பெற்றவர் யார்?**

A) இந்திய ரிசர்வ் வங்கி
B) மத்திய நிதி அமைச்சகம்
C) பாரத அரசு வங்கி
D) இந்திய ஜனாதிபதி

**107. பி.எஸ்.என்.எல் (BSNL) –ன் தலைவர்**

A) சித்ரா நாராயண்
B) பிரசாத்
C) பாஜ்பட்
D) சேத்

**108. அட்டவணையில் அடங்கிய வங்கி என்பது**

A) ரூபாய் 100 கோடி வைப்பாக கொண்ட வங்கி
B) இந்திய ரிசர்வ் வங்கியின் இரண்டாம் பட்டியலில் அடங்கிய வங்கி
C) 100 கிளைகளுக்கு மேல் உடைய வங்கி
D) தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கான வங்கி

**109. தமிழ்நாட்டில் விவசாய வருமான வரி விதிப்பது**

A) மாநில அரசு
B) நகர சபைகள்
C) பஞ்சாயத்துகள்
D) இவற்றுள் எதுவுமில்லை

**110. ஒரு தொழில் துறையிலிருந்து கிடைக்கும் பல்வேறு வகையான வருவாய் பின்வருவதில் ஒன்று நிச்சயமற்றது.**

A) வாரம் B) கூலி
C) வட்டி D) இலாபம்

**111. இந்தியாவின் இணைப்பு மொழி எது?**

A) ஆங்கிலம் B) கிரீக்
C) பிரெஞ்ச் D) ஹிந்தி

**112. ஓர் ஆளுநர் (Governor) ஆவதற்கு குறைந்தபட்ச வயது என்ன?**

A) 25 B) 30
C) 35 D) 60

**113. இராஜ்ய சபாவின் ஆயுட்காலம் என்ன?**

A) 6 வருடங்கள்
B) 5 வருடங்கள்
C) நிரந்தரமானது
D) இவற்றுள் எதுவுமில்லை

**114. இந்தியப் பிரதமரை யார் நியமனம் செய்கிறார்?**

A) லோக் சபா
B) இராஜ்ய சபா
C) இந்திய ஜனாதிபதி
D) இந்தியாவின் தலைமை நீதிபதி

**115. எந்த நாளில் இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்தது?**

A) ஆகஸ்ட் 14, 1947
B) ஆகஸ்ட் 15, 1947
C) ஜனவரி 26, 1950
D) நவம்பர் 26, 1949

**116. சுதந்திர இந்தியாவின் முதலாவது தலைமை நீதிபதி யார்?**

A) நீதிபதி மகாஜன்
B) நீதிபதி வி.ஆர். கிருஷ்ண ஐயர்
C) நீதிபதி ஷீலாட்
D) ஹரிலால் ஜே. கானியா

**117. ஒரு மாநில அரசை நீக்கும் அதிகாரத்தை அரசியலமைப்பின் எந்த ஷரத்து (Article) வழங்குகிறது?**

A) 356 B) 360
C) 17 D) 365

**118. பாண்டிச்சேரியின் தலைநகரமானது**

A) பாண்டிச்சேரி
B) மாஹி
C) காரைக்கால்
D) இவற்றுள் எதுவுமில்லை

**119. பாண்டிச்சேரியின் லெப். கவர்னர் யார்?**

A) சாமன் லால்
B) ரஜினி ராய்
C) அகர்வால்
D) இவர்களில் எவருமில்லை

**120. அசாமின் தலைநகரம் எது?**

A) திஸ்பூர் B) ரெய்ப்பூர்
C) இம்பால் D) பனாஜி

**121. இந்தியாவின் துணை ஜனாதிபதி யார்?**

A) எல்.கே.அத்வானி
B) கே.ஆர். நாராயணன்
C) கிருஷ்ணகாந்த்
D) இவர்களில் எவருமில்லை

**122. இந்தியாவின் நிதி அமைச்சர் யார்?**

A) டி.ஆர். பாலு

B) ஜஸ்வந்த் சிங்

C) யஷ்வந்த் சின்ஹா

D) இவர்களில் எவருமில்லை

**123. இந்தியாவின் உள்துறை அமைச்சர் யார்?**

A) ராம் நாயக்

B) ஜஸ்வந்த் சிங்

C) எல்.கே. அத்வானி

D) இவர்களுள் எவருமில்லை

**124. இந்தியாவின் வேளாண்மைத் துறை அமைச்சர் யார்?**

A) நிதிஷ் குமார்

B) அத்வானி

C) உமாபாரதி

D) இவர்களில் எவருமில்லை

**125. இந்தியாவில் முப்படைகளின் தலைவர் யார்?**

A) பிரதம மந்திரி

B) பாதுகாப்பு மந்திரி

C) ஜனாதிபதி

D) இவர்களில் எவருமில்லை

**126. இந்தியாவின் திட்டக்குழுவின் தலைவராக பதவியின் அடிப்படையில் யார் இருக்க முடியும்?**

A) ஜனாதிபதி

B) துணை ஜனாதிபதி

C) பிரதமர்

D) உள்துறை அமைச்சர்

**127. இந்திய துணை ஜனாதிபதி பின்வரும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?**

A) லோக்சபா உறுப்பினர்களால்

B) இராஜ்யசபா உறுப்பினர்களால்

C) லோக்சபா மற்றும் ராஜ்ய சபா உறுப்பினர்களால்

D) மாநிலங்களின் சட்டசபைகளின் உறுப்பினர்களால்

**128. இந்தியாவில் இரண்டாவதாக அதிகமாக பேசப்படும் மொழி**

A) தமிழ் B) வங்காளம்

C) பஞ்சாபி D) தெலுங்கு

**129. எப்பொழுது வங்காள பிரிவினை பிரிட்டிஷ் அரசாங்கத்தால் திரும்பப் பெறப்பட்டது?**

A) கி.பி. 1911

B) கி.பி. 1914

C) கி.பி. 1917

D) கி.பி. 1919

**130. எங்கு இந்திய தேசிய காங்கிரஸ் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஏற்றுக்கொண்டது?**

A) பம்பாய்

B) அகமதாபாத்

C) பூனா

D) கல்கத்தா

**131. மிதவாதிகள்–தீவிரவாதிகள் பிளவின்போது இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக இருந்தவர் யார்?**

A) ராஷ்பிஹாரி போஸ்

B) பெரோஸ் ஷா மேத்தா

C) மதன்மோகன்

D) பிபின் சந்திர பால் மாளவியா

**132. இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக, 1886, 1889 மற்றும் 1906 ஆம் ஆண்டுகளில் இருந்தவர் யார்?**

A) ஏ.ஓ. ஹியூம்

B) பத்ருதீன் தியாப்ஜி

C) டபிள்யூ.சி. பானர்ஜி

D) தாதாபாய் நௌரோஜி

**133. தாதாபாய் நௌரோஜி ஒரு**

A) மிதவாதி

B) தீவிரவாதி

C) பயங்கரவாதி

D) இவர்களில் யாருமில்லை

**134. பாலகங்காதர திலகர் ஒரு**

A) மிதவாதி

B) தீவிரவாதி

C) பயங்கரவாதி

D) இவர்களில் யாருமில்லை

**135. கீழ்க்கண்டவர்களில் யார் தீவிரவாதிகள்?**

A) தாதாபாய் நௌரோஜியும் பத்ருதீன் தயாப்ஜியும்

B) சுரேந்திரநாத் பானர்ஜியும் மதன்மோகன் மாளவியாவும்

C) டபிள்யு.சி. பானர்ஜியும் பெரோஸ் ஷா மேத்தாவும்

D) பாலகங்காதர் திலகரும் ஸ்ரீ அரவிந்தரும்

**136. பீஹாரி மாணவர்கள் மாநாட்டை உருவாக்கியவர் யார்?**

A) ஸ்ரீ அரவிந்தர்

B) டபிள்யு சி. பானர்ஜி

C) பிபின் சந்திர பால்

D) இராஜேந்திர பிரசாத்

**137. முதல் சுதந்திர இந்திய அரசியலமைப்பு நகலைத் தயாரித்தவர் யார்?**

A) விஜயராகவாச்சாரியார்

B) டி.டி. கிருஷ்ணமாச்சாரி

C) பி.ஆர். அம்பேத்கார்

D) ஜவஹர்லால் நேரு

**138. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையைத் தயாரித்தவர் யார்?**

A) பி.ஆர். அம்பேத்கார்

B) மகாத்மா காந்தி

C) ஜவஹர்லால் நேரு

D) இராஜேந்திர பிரசாத்

**139. நியூ இந்தியா என்ற ஆங்கில வார இதழை நிறுவியர் யார்?**

A) பிபின் சந்திர பால்

B) அன்னிபெசண்ட்

C) தாதாபாய் நௌரோஜி

D) லாலா லஜபதி ராய்

**140. கீழ்க்கண்டவர்களில் யார் லோகமான்யர் என்று நினைவுபடுத்தப்படுகிறார்?**

A) பாலகங்காதர திலகர்

B) பிபின் சந்திர பால்

C) லாலா லஜபதி ராய்

D) தாதாபாய் நௌரோஜி

**141. பொருளாதாரத் தேசியத்தின் முன்னோடி என்று கருதப்படுபவர் யார்?**

A) பிபின் சந்திர பால்

B) கோபால கிருஷ்ண கோகலே

C) மதன்மோகன் மாளவியா

D) ஆர்.சி.தத்

**142. 1921–ஆம் ஆண்டில் மாப்ளா புரட்சி எங்கு ஏற்பட்டது?**

A) கேரளா

B) பஞ்சாப்

C) சென்னை

D) உத்தரப் பிரதேசம்

**143. இந்தியா பாகிஸ்தான் எல்லையைப் பிரித்தவர்**

A) சர் சிரில் ரெட்கிளிஃப்

B) மவுண்ட்பேட்டன் பிரபு

C) டல்ஹௌசி பிரபு

D) லாரன்சு

**144. கீழ்க்கண்டவர்களுள் மூன்று வட்டமேஜை மாநாடுகளிலும் பங்கேற்றவர் யார்?**

A) மகாத்மா காந்தி

B) மதன் மோகன் மாளவியா

C) சர்தார் வல்லபாய் படேல்

D) பி.ஆர். அம்பேத்கார்

**145. 1940–ஆம் ஆண்டில் தனிநபர் சத்தியாகிரகத்தை தொடங்கி வைத்தவர் யார்?**

A) எம்.கே. காந்தி

B) ஜவஹர்லால் நேரு

C) ஆச்சாரியா வினோபா பாவே

D) சர்தார் வல்லபாய் படேல்

**146. 1919–ஆம் ஆண்டில் காந்திஜி ஏன் சத்தியாகிரக சபையை ஏற்படுத்தினார்?**

A) இந்திய அரசுச் சட்டம் 1909–ற்கு எதிராக

B) ரௌலட் சட்டத்திற்கு எதிராக

C) இந்திய அரசாங்கச் சட்டம், 1919–ற்கு எதிராக

D) ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கு எதிராக

**147. 'விங்க்ஸ் ஆஃப் ஃபயர்' ('அக்னிச் சிறகுகள்') என்னும் புத்தகத்தின் ஆசிரியர் யார்?**

A) குஷ்வந்த் சிங்

B) அப்துல் கலாம்

C) அருண் ஷோரி

D) பிராங்க் மொரேஸ்

**148. 'மிர்' (Mir) என்பதென்ன?**

A) இரஷ்ய விண்வெளி நிலையம்

B) அமெரிக்க விண்வெளி நிலையம்

C) இந்திய விண்வெளி நிலையம்

D) இவற்றுள் எதுவுமில்லை



www.mntfreeias.com

**149. காந்திகிராம் கிராமியப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் யார்?**

A) டாக்டர் எஸ். ஞானம்

B) டாக்டர் எஸ். நடராஜன்

C) டாக்டர் சி. பங்கஜம்

D) இவர்களுள் எவருமில்லை

**150. 'டிஸ்கவரி ஆஃப் காட்' (Discovery of God) என்னும் புத்தகத்தின் ஆசிரியர் யார்?**

A) ரசிக் சகாரியா

B) அப்துல் கலாம்

C) டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

D) இவர்களுள் எவருமில்லை

**151. யு.என்.ஓ.வின் (U.N.O.) பொதுச் செயலர் 2001–ல் யார்?**

A) கோபி அன்னன்

B) ராபர்ட்

C) ஜார்ஜ் புஷ்

D) பில் கிளிண்டன்

**152. 2000 வருடத்திய காந்தி அமைதிப் பரிசு யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது?**

A) பில் கிளிண்டன்

B) நெல்சன் மண்டேலா

C) கே.ஆர். குப்தாஜி

D) இவர்களுள் எவருமில்லை

**153. இந்தியாவின் முதல் பெண் வெளிநாட்டுச் செயலர் யார்?**

A) சோகிலா ஐயர்

B) பத்மபிரியா

C) மம்தா பானர்ஜி

D) இவர்களுள் எவருமில்லை

**154. 2001–ல் அமெரிக்காவுக்கான புதிய இந்திய தூதுவர் யார்?**

A) லலித் மான்சிங்

B) எம்.கே. ராவ்

C) கே.சி.பந்த்

D) இவர்களுள் எவருமில்லை

**155. 2001–ல் இந்திய இராணுவ பணியாளர் தலைவர் யார்?**

A) ஜெனரல் ஜாஃபர்

B) ஜெனரல் எஸ். குமார்

C) ஜெனரல் மானக்ஷா

D) இவர்களுள் எவருமில்லை

**156. இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?**

A) எம்.எஸ்.கில்

B) டி.என். சேஷன்

C) பி.கே. ராவ்

D) இவர்களுள் எவருமில்லை

**157. இந்தியாவின் முதல் பாதுகாப்புப் படைப் பணியாளர் தலைவர் யார்?**

A) அட்மிரல் சுஷில் குமார்

B) அட்மிரல் பத்மநாபன்

C) அட்மிரல் கன்வார்ஜி

D) இவர்களுள் எவருமில்லை

**158. 2001 இல் இந்திய மக்கள்தொகை ஆணையர் மற்றும் பொதுப் பதிவாளர் யார்?**

A) ஜெ.கே. பாந்தியா

B) எம்.எஸ்.கில்

C) டி.என்.சேஷன்

D) இவர்களுள் எவருமில்லை

**159. இந்தியாவில், 1991 மக்கள்தொகைக் கணக்குப் படி சராசரி எழுத்தறிவு வீதம் என்ன?**

A) 40% B) 42%

C) 48% D) 52%

**160. 'ஆபரேஷன் ஃப்ளட் லைட்' (Operation Floodlight) என்பது**

A) அறிவொளியைப் பெருக்குதல்

B) அணையொளியைப் பெருக்குதல்

C) தண்ணீர், வெளிச்சம் பெருக்குதல்

D) இவற்றுள் எதுவுமில்லை

**161. முண்டந்துறை எதற்காக முக்கிய புகழ் பெற்றது?**

A) குதிரைகள் B) பசுக்கள்

C) புலிகள் D) நாய்கள்

**162. தமிழ்நாட்டில் கூந்தன்குளம் எதற்கு குறிப்பிடத் தக்கது?**

A) பறவைகள்

B) மலர்கள்

C) தேக்கு மரம்

D) இவற்றுள் எதுவுமில்லை

**163. தமிழ்நாட்டில் அகஸ்தியர் நீர்வீழ்ச்சி எங்குள்ளது?**

A) குற்றாலம்

B) குமரக்கோவில்

C) பாபநாசம்

D) களக்காடு

**164. தமிழ்நாட்டில், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் எங்குள்ளது?**

A) சென்னை

B) தஞ்சாவூர்

C) திருச்சி

D) திருநெல்வேலி

**165. 'ஒண்டர் பாக்ஸ்' என்று குறிப்பிடப்படுவது**

A) தொலைக்காட்சி

B) தொலைபேசி

C) கணிப்பொறி

D) இவற்றுள் எதுவுமில்லை

**166. எந்த நீர்வீழ்ச்சி 'தி ஸ்பா ஆஃப் தி சவுத்' (The Spa of the South) என அழைக்கப்படுகிறது?**

A) மணிமுத்தாறு

B) கொடைக்கானல்

C) குற்றாலம்

D) இவற்றுள் எதுவுமில்லை

**167. கீழ்வருபவர்களுள், ஜனநாயகத்திற்கு யார் தக்க இலக்கணம் அளித்தார்?**

A) ஆபிரஹாம் லிங்கன்

B) ஜார்ஜ் வாஷிங்டன்

C) ஜெ.எஃப். கென்னடி

D) இவர்களுள் எவருமில்லை

**168. ஐ.நா. பொதுச் சபையின் தலைவராயிருந்த முதல் இந்தியர்**

A) இந்திரா காந்தி

B) ஆர்.வெங்கட்ராமன்

C) விஜயலட்சுமி பண்டிட்

D) இவர்களுள் எவருமில்லை

**169. யூ தாண்ட் நினைவுப் பரிசு பெற்ற இந்தியப் பிரதமர்**

A) ஜவஹர்லால் நேரு

B) லால்பகதூர் சாஸ்திரி

C) வி.பி. சிங்

D) இந்திரா காந்தி

**170. பங்களாதேசத்தின் தலைநகரம் எது?**

A) டாக்கா

B) கராச்சி

C) லாகூர்

D) இவற்றுள் எதுவுமில்லை

**171. எந்த மாநாட்டில் பஞ்சசீலக் கொள்கை வெளியிடப்பட்டது?**

A) பாண்டுங்

B) கெய்ரோ

C) பெங்களூர்

D) இவற்றுள் எதுவுமில்லை

**172. ஐ.எல்.ஓ (ILO) வின் தலைமையகம் எங்கு உள்ளது?**

A) ரோம்

B) மெக்கா

C) லண்டன்

D) ஜெனீவா

**173. கீழ்வரும் நாடுகளுள், எந்த நாட்டில் எழுதப்படாத அரசியலமைப்பு உள்ளது?**

A) இந்தியா

B) ஜப்பான்

C) பிரான்ஸ்

D) இங்கிலாந்து

**174. அபு மலைத்தொடர் (Mount Abu) எங்கு உள்ளது?**

A) இந்தியா

B) சீனா

C) பாகிஸ்தான்

D) இவற்றுள் எதுவுமில்லை

**175. இந்திய விஞ்ஞான நிறுவனம் (Indian Institute of Science) எங்கு உள்ளது?**

A) பெங்களூர்

B) புது டில்லி

C) சென்னை

D) மும்பை

**176. நாசிக் (Nasik) அமைந்துள்ள நதிக்கரை**

A) கோதாவரி

B) சட்லட்ஜ்

C) காவேரி

D) வைகை



www.mntfreeias.com

**177. வ.உ. சிதம்பரனாரின் படைப்பு எது?**

**A)** மெய்யறிவு

**B)** வீர விடுதலை

**C)** பெண்ணின் பெருமை

**D)** இவற்றுள் எதுவுமில்லை

**178. 'கீதாஞ்சலி'யின் ஆசிரியர் யார்**

**A)** தாகூர்

**B)** பாரதியார்

**C)** பாரதிதாசன்

**D)** கண்ணதாசன்

**179. ஐ.டி.பி.ஐ (IDBI) என்பது ஒரு**

**A)** வங்கி

**B)** வாரியம்

**C)** குழு

**D)** மையம்

**180. நிதிக் கொள்கையின் தொடர்பு**

**A)** பொது வருவாய், செலவுடன்

**B)** மக்கள் தொகையுடன்

**C)** பண வெளியீட்டுடன்

**D)** ஏற்றுமதி, இறக்குமதியுடன்

**181. 3 : 24 என்பதற்கு சமமானது?**

**A)** 5 : 30 **B)** 8 : 35

**C)** 7 : 35 **D)** 8 : 64

**182.**




Iன் ஆரம் 3 செ.மீ.

IIன் ஆரம் 5 செ.மீ.

IIIன் ஆரம் 4 செ.மீ.

**இம்மூன்று வட்டங்களின் மையங்களைச் சேர்த்து உருவாக்கப்படும் முக்கோணம் ABC இன் சுற்றளவு யாது?**

**A)** 12 செ.மீ. **B)** 15 செ.மீ.

**C)** 24 செ.மீ. **D)** 32 செ.மீ.

**183.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 35 | | 11 | 21 | | 19 | 3 | | 29 |
| | 12 | | | 9 | | | ? | |
| 26 | | 8 | 13 | | 18 | 16 | | 15 |

**A)** 3 **B)** 8

**C)** 2 **D)** 1

**184.** $\dfrac{1}{3+\dfrac{2}{2+\dfrac{1}{2}}}$ **–ன் மதிப்பு**

**A)** $\dfrac{5}{19}$ **B)** $\dfrac{19}{5}$

**C)** $\dfrac{4}{5}$ **D)** $\dfrac{5}{4}$

**185. பின்வரும் படத்தில் எத்தனை சதுரங்கள் உள்ளன?**



**A)** 10 **B)** 15

**C)** 8 **D)** 9

**186. பின்வரும் தொடரில் அடுத்த உறுப்பு யாது?**

Q1F, S2E, U6D, W21C, ............ .

**A)** Y66B

**B)** Z88B

**C)** Y88B

**D)** Z66B

**187.** $\dfrac{x}{54}=\dfrac{96}{x}$ **எனில், xன் மதிப்பு யாது?**

**A)** 72 **B)** 27

**C)** 36 **D)** 63

188. $\frac{0.5+0.5\times0.5}{0.4+0.1}$

A) 0.5 B) 1.5
C) 0.75 D) 0.05

189. B இல் A மூன்றில் ஒரு பங்கு, C-இல் B இரண்டில் ஒரு பங்கு எனில் A : B : C எவ்வளவு?

A) 1 : 3 : 6
B) 2 : 3 : 6
C) 3 : 1 : 2
D) 3 : 2 : 6

190. 60மீ.×30மீ. அளவுள்ள ஒரு செவ்வக வடிவ வயலின் ஒரு மூலையில் 16 மீட்டர் நீளமுள்ள கயிற்றால் ஒரு மாடு கட்டப்பட்டுள்ளது. அந்த மாடு தோராயமாக எவ்வளவு புல்லை மேயும்?

A) 128 மீ$^2$ B) 201 மீ$^2$
C) 402 மீ$^2$ D) 805 மீ$^2$

191. $\frac{3}{4}$ என்பது சதவிகிதத்தில் எவ்வளவு?

A) 0.75% B) 60%
C) 75% D) 7.5%

192. $\frac{1}{2}$ சதவீதத்தை தசம பின்னத்தில் எழுதுக.

A) 0.5 B) 0.05
C) 0.005 D) 0.0005

193. 644 இல் $\frac{5}{7}$ = ?

A) 640
B) 460
C) 1460
D) இவற்றுள் எதுவுமில்லை

194. நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை எனில், நேற்று என்ன கிழமை?

A) புதன்கிழமை
B) வியாழக்கிழமை
C) வெள்ளிக்கிழமை
D) சனிக்கிழமை

195. 1 மணிக்கு 1 முறையும் 2 மணிக்கு 2 முறையும் ஒரு கடிகாரம் அடித்தால், 24 மணி நேரத்தில் எத்தனை முறை மணி அடிக்கும்?

A) 156 B) 78
C) 40 D) 12

196. கீழ்க்கண்ட வரிசையை நிறைவு செய்க:

7, 8, 10, 13, 17.........

A) 22 B) 25
C) 30 D) 40

197. மூன்று எண்களின் சராசரி 28. இரண்டாம் எண் முதல் எண்ணைப் போல் இரு மடங்கு. மூன்றாம் எண் இரண்டாம் எண்ணைப் போல் இரு மடங்கு. அந்த மூன்று எண்கள் (வரிசைப்படி)

A) 12, 24, 48
B) 24, 12, 48
C) 24, 20, 40
D) 20, 40, 24

198. கலையரங்கம் ஒன்றில் இருக்கைகளில் $\frac{1}{4}$ பாகம் பையன்களும் $\frac{3}{8}$ பாகம் பெண்களும் உட்கார்ந்திருந்தனர். கலையரங்கில் அந்த குழந்தைகள் இருந்த இருக்கைகளின் சதவீதம் என்ன?

A) 62.5% B) 70%
C) 75% D) 80%

199. மற்ற மூன்றிலிருந்து வேறுபட்ட எண்ணை தேர்ந்தெடுக்க.

A) 11 B) 13
C) 15 D) 17

200. ஒருவர் தன் வருமானத்தில் 75% செலவு செய்கிறார். அவருடைய வருமானம் 20% அதிகரித்தபோது அவர் தன் செலவை 10% அதிகரித்தால், அவருடைய சேமிப்பு எத்தனை சதவீதம் அதிகரிக்கும்?

A) 10% B) 25%
C) $37\frac{1}{2}$% D) 50%

# பொதுத்தமிழ்

1. **தொங்கு பாலம் என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.**
   **A)** பண்புத் தொகை
   **B)** வினைத் தொகை
   **C)** வினையெச்சம்
   **D)** குறிப்பு வினை முற்று

2. **மாநகர் என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.**
